


**28. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் பாதுகாப்புத்துறை வெற்றியடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – செஷல்ஸ் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தைகள், அந்நாட்டு அதிபர் பேட்ரிக் ஹெர்மினி உடன் தற்போது நடைபெற்று வருகிறது.

3. திருச்செந்தூரிலிருந்து சென்னை, கோவைக்கு கூடுதல் ரயில்களை இயக்க பரிசீலிக்கப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் போலியோ சொட்டு மருந்து முகாமை சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.

5. I.C.C. உலககோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் பாதுகாப்புத்துறை வெற்றியடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 135-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட C-295 ரக விமானம் தனது முதல் பயணத்தை இம்மாதம் மேற்கொண்டதாக கூறினார்.

இத்தகைய 40 விமானங்கள் தற்போது நாட்டில் தயாரிக்கப்பட்டு வருவதாக கூறிய பிரதமர், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் விண்வெளித் துறைக்கு இது புதிய உத்வேகத்தை அளிப்பதோடு, வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக தெரிவித்தார்.

கொல்கத்தாவில் அண்மையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட I N S துணகிரி, I N S சன்சோதக், I N S அக்ரே ஆகிய
3 போர்க்கப்பல்கள் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர் கடல் முதல் வானம் வரை நாடு பாதுகாப்பாகவும், தன்னிறைவு பெற்றதாகவும் திகழ்கிறது என்றார்.

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி கடந்த 21-ம் தேதி, உலகம் முழுவதும் 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற பல்வேறு யோகா நிகழ்ச்சிகள் இந்தியாவின் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்றார்.

அஹமதாபாத்தில் நடைபெற்ற உலக யோகாசன சாம்பியன் பட்ட போட்டியில் 102 தங்க பதக்கங்கள் உட்பட, 114 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்ததையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

வெற்றி பெற்றவர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

நாட்டை கட்டமைப்பதில் மக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று குறிப்பிட்ட பிரதமர், மேற்காசிய சூழலை கருத்தில் கொண்டு, தங்கத்தில் முதலீடு செய்வதை தவிர்க்குமாறும், வெளிநாட்டு பயணங்களை தள்ளி வைக்குமாறு தாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கூறினார்.

மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்த பிரதமர், மக்கள் சக்தி நாட்டை வலுப்படுத்தி வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாடுமுழுவதும் உள்ள கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு காப்பீடு வசதிகள் தற்போது கிடைத்துள்ளதாக கூறிய அவர், பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதம மந்திரி ஆயுள் காப்பீடு உள்ளிட்ட திட்டங்களின் மூலம் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

இத்தகைய திட்டங்கள் குறித்த தகவல்களை குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளுமாறு நாட்டுமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

மக்கள் மூட நம்பிக்கைகளை அறிவியல் அனுபவம் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் எதிர்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்திய பிரதமர், சரியான தகவல்கள் மூலம் மூட நம்பிக்கைகளிலிருந்து மக்கள் வீடுபட முடியும் என்றார்.

விளையாட்டுத்துறை வேகமாக வளர்ந்து வருவதாக எடுத்துரைத்த பிரதமர், இதில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் மக்களின் படைப்பாற்றலை பாதுகாப்பதற்காக நாளந்தா பல்கலைக்கழகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறிய பிரதமர், சாஸ்திரார்த் என்ற அறிவுசார் விவாதங்களின் மூலம் பண்டைய மரபுகளை இப்பல்கலைக் கழகம் மீண்டும் உயிர்ப்பித்து உள்ளதாக தெரிவித்தார்.

நாட்டிலுள்ள பிற பல்கலைக் கழகங்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நவீன தொழில் நுட்பத்தை இந்தியாவின் பாரம்பரியத்துடன் ஒருங்கிணைக்கும் பதிய பாடப் பிரிவுகளை பல்கலைக் கழகங்கள் உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்திய கலாச்சாரம், உலகின் பல்வேறு பகுதிகளுக்கு சென்றடைவது மகிழ்ச்சி அளிப்பதாக கூறிய பிரதமர், டோம்னிக் குடியரசில் வசிக்கும் இந்தியர்கள், வேத மந்திரங்களை கற்றுத் தேர்ந்து வருவதாக எடுத்துரைத்தார்.

பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து சுற்றுச்சூழலுக்கு உகந்த செங்கற்களாக மாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக கூறிய பிரதமர், பொது இடங்களை அலங்கரிக்க இத்தகைய செங்கற்களை பயன்படுத்த அறிவுறுத்தினார்.

விநாயகர் சதுர்த்திக்காக செய்யப்படும் விநாயகர் சிலைகள் உள்ளூர் மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களால் உருவாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்று கூறிய பிரதமர், களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தினார்.

இதன்மூலம் ஆறு, குளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும் என்று பிரதமர் கூறினார்.

நீர் பாதுகாப்பின் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், "மழை நீரை சேமிப்போம்" இயக்கம் மேலும் வலுப்பெற வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஷீசல்ஸ்

இந்தியா – செஷல்ஸ் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி, அந்நாட்டு அதிபர் பேட்ரிக் ஹெர்மினி உடன் தலைநகர் விக்டோரியாவில் தற்போது மேற்கொண்டு வருகிறார்.

இருதரப்பு ஒத்துழைப்பு, மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இருதலைவர்களும் ஆலோசித்து வருகின்றனர்.

தொடர்ந்து பிரதமர், அந்நாட்டு தேசிய சட்டமன்றத்தில் உரையாற்றுவதோடு, இந்திய வம்சாவளியினரையும் சந்திக்க உள்ளார்.

பின்னர் ரோச் கைமானில் நடைபெறும் ஷீசல்ஸ் தேசிய தின கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் வன விலங்கு பாதுகாப்பு கொள்கைகள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் சரிஸ்கா புலிகள் காப்பகத்தில் மீண்டும் புலிகள் அறிமுகப்படுத்தப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் உலகின் மொத்த காட்டுப்புலிகள் எண்ணிக்கையில் 75 சதவிகிதம் இந்தியாவில் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

திருச்செந்தூரிலிருந்து சென்னை, கோவைக்கு கூடுதல் ரயில்களை இயக்குவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் ரயில் நிலைய மேம்பாட்டு பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தில் உலகத்தரம் வாய்ந்த அடிப்படை கட்டமைப்புகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையம் உட்பட மாநிலத்தின் 77 ரயில் நிலையங்களில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

போலியோ

நாடுமுழுவதும் போலியோ சொட்டு மருந்து முகாம் இன்று நடைபெறுகிறது.

இம்முகாமை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் சென்னை பாலவாக்கத்தில் தொடங்கி வைத்தார்.

தென்காசி மாவட்டம் நன்னகரம் துணை சுகாதார நிலையத்தில் மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ்,

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ்,

கோவையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத்குமார் ஆகியோர் இம்முகாமை தொடங்கிவைத்தனர்.

காஞ்சிபுரத்தில் சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைத்து பேசிய மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்தை தவறாது வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

மாநிலம் முழுவதும் மாலை 5 மணி வரை நடைபெறும் இம்முகாமில் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கப்படும்.

விடுபட்ட குழந்தைகளுக்கு நாளையும், நாளை மறுநாளும் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

மரிய வில்சன்

மாநில அரசின் வருவாய் இழப்பிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவை உடனடியாக சரி செய்யப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2028-ம் ஆண்டு நடைபெறவுள்ள மகாமக பெருவிழாவிற்கான நிதி ஒதுக்கீடு குறித்து, வேளாண் துறை அமைச்சர் திரு. வினோத் பரிந்துரையின் படி முடிவெடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

விஜய் தமிழன் பார்த்திபன்

தமிழகத்தில் அரசு போக்குவரத்து கழகத்திற்கு இனி குளிர்சாதன வசதியுள்ள பேருந்துகளை மட்டுமே வாங்குவதற்கு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

சேலம் சீலநாயக்கன் பட்டியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாநிலம் முழுவதும் மகளிருக்கான இலவச பயணத் திட்டம் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றார்.

போக்குவரத்துக் கழகத்தின் வருவாயை அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சேலம் அரசு மருத்துவமனையில் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஷாஜஹான்

தமிழக அரசு அனைத்து துறைகளிலும் ஊழலற்ற நிர்வாகம் என்ற இலக்கை நோக்கி பயணிப்பதாக மாநில சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் திரு. ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் ஜாம்புவான் ஓடை ஷேக் தாவூது ஆண்டவர் தர்காவில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், புதிய அரசு பதவியேற்ற 40 நாட்களில் மக்களுக்கு இடையூறாக இருந்த

டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கூறினார்.

தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உள்ளதாக குறிப்பிட்ட அவர், இந்த விஷயத்தில் முதலமைச்சரின் முடிவு மாநில நலனை கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழகம் தற்போது பல்வேறு துறைகளில் நெருக்கடியை சந்தித்து வருவதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், மாநிலத்தில் மின்வெட்டு அதிகரித்து இருப்பதாகவும், குறிப்பாக இரவு நேர மின்தடை தொடர்வதாகவும் கூறினார்.

தேர்தல் வாக்குறுதிக்கு முரணாக பல்வேறு தகுதி விதிமுறைகளை சுட்டிக்காட்டி விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி மறுக்கப்படுவதாகவும் அவர் குறை கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கடலூர்

கடலூர் மாவட்டம் நெய்வேலி என்.எல்.சி நிறுவனத்தில் புத்தகத் திருவிழா இன்றுடன் நிறைவு பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோவிலில் ஆனி தேரோட்டம் தற்போது வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ், குறு, சிறு, நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு. மதன்ராஜா உள்ளிட்டோர் தேரை வடம் பிடித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ. சி. சி. உலககோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் லண்டன் லார்ட்ஸில் இந்தியா – ஆஸ்திரேலியாவை இன்றிரவு 7 மணிக்கு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

U.S. ஓப்பன் பேட்மிட்டன் சாம்பியன் பட்டப் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் சீன தைபேயின் சூ லீ யாங்கை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.